**செய்தி வெளியீடு எண்:139** **நாள் :01.03.2016**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.3.2016) தலைமைச் செயலகத்தில், 29 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 109 புதிய பேருந்துகள், 40 புதிய சிற்றுந்துகள் (Small Buses) ஆகியவற்றை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 2 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பணிமனைகளை திறந்து வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்தில் போக்குவரத்து சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப, கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் விரிவடைந்து வருகின்றன. பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு, புதிய பேருந்து சேவைகளை துவக்கி வைத்தல், புதிய வழித்தடங்களை அறிமுகப்படுத்துதல், புதிய பணிமனைகளை துவக்கி வைத்தல், போன்ற பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் 9 பேருந்துகள், சென்னை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் 12 குளிர்சாதன பேருந்துகள், விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 41 பேருந்துகள், சேலம் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 14 பேருந்துகள், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 25 பேருந்துகள், மதுரை அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 6 பேருந்துகள், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 2 பேருந்துகள் மற்றும் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் 13 வழித்தடங்களில் 40 சிற்றுந்துகள், என மொத்தம் 29 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 109 புதிய பேருந்துகள் மற்றும் 40 புதிய சிற்றுந்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மேலும், விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகம் வேலூர் மண்டலத்தில் 96 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சோளிங்கர் பணிமனை, காஞ்சிபுரம் மண்டலத்தில் 95 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரிக்கை–II பணிமனை, கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகம் புதுக்கோட்டை மண்டலத்தில் 99 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இலுப்பூர் பணிமனை, என மொத்தம் 2 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பணிமனைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.தோப்பு என்.டி.வெங்கடாசலம், தலைமைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. ச.வி. சங்கர், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. மே. பாலகிருஷ்ணசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –09.
நாள் : 1.3.2016